
விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 13 ஞாயிறு 29.08.2021 மலர் - 2, இதழ் - 145

# கிருஷ்ண பிரேமி சுவாமிகள் வேதனை



விஜயபாரதம்

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் என்ற அரசின் திட்டம் குறித்து பேசிய பரனூரை சேர்ந்த ஸ்ரீ அண்ணா எனப்படும் கிருஷ்ண பிரேமி சுவாமிகள், கோவில்களில் மூலவரை தொடுவதற்கென்றே சிலர் உள்ளனர். மற்றவர்கள் தொட முடியாது. கடவுளை பாடிய ஆழ்வார்கள், ராமானுஜர், வானமாமலை, அகோபிலம் ஜீயர்கள், சங்கராச்சாரியார்கள் யாரும் தொட்டதில்லை. அரசர்கள், பீடாதிபதிகள் கூட மூலவர்களை தொட்டதில்லை. இவை அனைத்துமே ஏற்கனவே நியமிக்கப்பட்ட சம்பிரதாயங்களின்படியே நடக்கிறது. இந்த நடைமுறைகளை மாற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இது பக்தி அல்ல வீம்பு. மக்களை நாத்திகர்களாக்கும் திட்டம் இது. அரசு இவ்வாறு செய்து மக்களை பேதப்படுத்துகிறது, முட்டாளாக்குகிறது. உங்களுக்கு அரசு தானாக கிடைக்கவில்லை. அந்த இறைவன்தான் கொடுத்தார். என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என நினைக்க வேண்டாம். மக்களிடம் சென்று கேட்டுப்பாருங்கள். தற்போதுள்ள வழக்கத்தை மாற்றக்கூடாது என்றுதான் பெரும்பாலானவர்கள் கூறுவார்கள். கடவுள் இல்லை என்பவர் எத்தனை பேர்? ஹிந்துக்களை மிரட்டுவது என்பது உங்களுக்கு கரும்பு தின்பது போலதான். ஆனால், இதனை சமாளிக்கும் மனப்பான்மை எங்களுக்கு உண்டு. ராமானுஜர் காலம் தொட்டு எவ்வளோ பிரச்னைகளை நாங்கள் சமாளித்துள்ளோம். அந்த சர்வேஸ்வரன் எதையும் திருத்துவார். இதையும் திருத்துவார்' என கூறியுள்ளார்.

# டார்ச் வெளிச்சத்தில் தடுப்பூசி



விஜயபாரதம்

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் 400 பேருக்கு தடுப்பூசி செலுத்தும் பணி கடந்த 27 ஆகஸ்ட் மாலை நடைபெற்றது. மதியம் 2 மணிக்கு தடுப்பு செலுத்துவதாக கூறிவிட்டு 4 மணிக்குத் தான் தடுப்பூசி மருந்தே கொண்டு வந்தனர். அதனால், மாலை 5 மணிக்கு மேல்தான் இந்த முகாம் தொடங்கியது. இரவு 8 மணிவரை தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற்றது. ஆனால் அங்கு மின் விளக்கு வசதி இல்லை என்பதால், செவிலியர்கள் செல்போன் டார்ச் லைட் பிடித்தபடியே மக்களுக்கு தடுப்பூசி செலுத்தினர்.

# தி.மு.க.வின் மற்றொரு நாடகம்



விஜயபாரதம்

மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களுக்கு தி.மு.க. ஆரம்பம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலும், ஆட்சி அமைந்ததும் மத்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப, தமிழக முதல்வர் ஸ்டாலின், வேளாண் சட்டங்களுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றினார். இதற்கு பா.ம.க., காங்கிரஸ், ம.தி.மு.க., வி.சி.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. பா.ஜ.க.,வும் அ.தி.மு.க.,வும் வெளிநடப்பு செய்தன. இதுகுறித்து பா.ஜ.க தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது டுவிட்டர் பக்கத்தில், 'மத்திய அரசின் மூன்று விவசாய சட்டங்களுக்கு எதிராகத் தி.மு.க தலைமையிலான அரசு சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்துள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். தமிழக விவசாயிகள் எவரும் இந்தச் சட்டங்களை எதிர்க்காது, மகிழ்ச்சியுடன் வரவேற்கும்போது, தமிழக மக்களுக்கு இது அறிவாலயத்தின் கண்துடைப்பு நாடகம் என்று நன்றாகத் தெரியும்' என்று கூறியுள்ளார்.

# இவர்கள்தான் கம்யூனிஸ்டுகள்



விஜயபாரதம்

தமிழகத்தை சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.எம்), 'தனது குடிமக்களுக்கு 200 கோடி டோஸ் தடுப்பூசி செலுத்தி சாதனை செய்துள்ள மக்கள் சீனம்' என தனது டுவிட்டர் பதிவில் படம் பதிவிட்டு கொண்டாடியுள்ளது. இதன் மூலம் கொரோனோ வைரசை பரப்பிய சீனா'விற்கு ஆதரவான தனது விசுவாசத்தை காண்பித்துள்ளது கம்யூனிச கட்சி. சீனா பரப்பிய வைரசிற்கு பாரதம் தடுப்பூசியை கண்டுபிடித்ததோடு அதனை 60 கோடிக்கும் அதிகமானோருக்கு செலுத்தியுள்ளது. இது தவிர ஐ.நா பாதுகாப்புப் படையினர், அண்டை நாடுகள் உட்பட பல்வேறு உலக நாடுகளுக்கும் தடுப்பூசியை அளித்து உதவி செய்துவருகிறது. இதைத்தவிர உலக நாடுகளுக்கு மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் என வாரிவழங்கி உதவியுள்ளது. இதனை எல்லாம் பாராட்டத் தெரியாத கம்யூனிஸ்ட்டுகள் பாரத மண்ணிலேயே வாழ்ந்துக்கொண்டு அதன் உணவையே சாப்பிட்டுவிட்டு தனது விஸ்வாசத்தை சீனாவுக்கு காட்டுகின்றனர். இதந்த புத்தி இவர்களிடம் இன்று நேற்றல்ல, பல காலமாக உள்ளது. பாரத சீன போரின்போது, ராணுவ வீரர்களுக்கு ரத்ததானம் செய்ய மறுப்பு, பாரதப் பொருளாதாரம், ராணுவ தளவாட உற்பத்தியை தடுப்பது போன்ற காரனங்களுக்காக வேண்டும் என்றே அக்காலத்தில் போரட்டங்கள் நடத்தியவர்கள்தான் கம்யூனிஸ்ட்டுகள் என்பது நினைவுகூரத்தக்கது.

# ஸ்டாலினின் கரிசனம் உண்மையா ?



விஜயபாரதம்

சட்டசபையில் பள்ளிக் கல்வித்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. பின்னர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அதற்கு பதில் அளித்து பேசினார். அப்போது மாணவர்களுக்கு அளிக்கும் புத்தக பையில் முந்தைய முதலமைச்சர்கள் புகைப்படம் இருந்து விட்டு போகட்டும், அதை மாற்ற ரூ.13 கோடி செலவு செய்ய வேண்டாம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார் என தெரிவித்தார். ஆனால் இது ஒன்றும் ஸ்டாலினின் புதிய முயற்சியோ அல்லது பணத்தை சேமிக்கும் நடவடிக்கையோ அல்ல. இதற்கு ஏற்கனவே முன்னுதாரணமாக உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்தியநாத் உள்ளார். கடந்த 2017ல் உ.பி முதல்வராக யோகி பதவியேற்ற போது, அம்மாநிலத்தில் பள்ளி குழந்தைகளுக்காக கொடுக்கப்பட இருந்த 35 ஆயிரம் புத்தகப் பைகளில் முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவின் புகைப்படம் இருந்தது. அதனை மாற்ற வேண்டாம், அந்த பையையே மாணவர்களுக்கு அளிக்கலாம் என்று யோகி தெரிவித்திருந்தார். புகைப்படத்தை நீக்க அரசுக்கு தேவையற்ற செலவு ஏற்படும் என்பதே இதற்கு காரணம். எனவே, ஸ்டாலினின் இந்த கரிசனமும் தி.மு.கவின் மற்றொரு ஸ்டிக்கர் ஒட்டும் முயற்சியைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. அடுத்ததாக, அரசு ஏற்கனவே கடும் நிதிச்சுமையில் உள்ள நிலையில் கருணாநிதிக்கு அரசு வரிப்பணத்தில் 35 கோடியை செலவழித்து நினைவு மண்டபம் எழுப்பும் ஸ்டாலின் 13 கோடிக்காக வருத்தப்படுவாரா என்ன? அப்படி கட்டித்தான் ஆகவேண்டும் என்றால், அவர்களின் மாபெரும் பணக்கார குடும்பத்தினர் தங்கள் சொந்த நிதியில் இருந்தே கருணாநிதியின் நினைவு மண்டபம் கட்ட நிதியளிக்கலாமே? என மக்கள் கேள்வி எழுப்பிவருகின்றனர்.

# விக்ரஹா நாட்டிற்கு அர்பணிப்பு



விஜயபாரதம்

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று உள்நாட்டு ரோந்து கப்பலான விக்ரஹாவை நாட்டு பணிக்காக அர்ப்பணித்தார். அப்போது பேசிய அவர், கடந்த சில ஆண்டுகளில் கடற்படைத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முன்னேற்றங்களை பாராட்டினார். மேலும், ‘பாதுகாப்பு அமைச்சகம், கடலோர காவல்படை, எல்&டி இடையே 'விக்ரமில்' தொடங்கிய பயணம் இன்று விஜய், வீர், வராஹா, வரத், வஜ்ரா என பயணித்து தற்போது 'விக்ரஹா' வை அடைந்துள்ளது. இது போன்ற பாதுகாப்புக் கப்பல்கள் நம்மைப் போன்ற ஒரு நாட்டிற்கு அவசியம் தேவை. பாரதம், இந்தியப் பெருங்கடலுடன் நேரடியாக தொடர்புடைய ஒரு நாடு. கடலோர காவல்படை எப்பொழுதும் நமது அண்டை நாடுகளுக்கு உதவி செய்யத் தயாராக உள்ளது. கடந்த ஆண்டு ‘நியூ டயமண்ட்’ என்ற டேங்கர், இந்த ஆண்டு ‘எக்ஸ்பிரஸ் பெர்ல்’ என்ற சரக்கு கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தின் போது இலங்கைக்கு வேகமான உதவி வழங்கியுள்ளது’ என பேசினார்.

# தேசிய கோகுல் இயக்கம்



தேச விடுதலையின் 75வது ஆண்டை கொண்டாடும் அம்ருத் மகோற்சவத்தின் ஒரு பகுதியாக, தொழில் முனைவுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பொது சேவை மையங்களின் வாயிலாக மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை சார்பில் நடத்தப்பட்டது. இதில், நாடு முழுதும் கிராம அளவில் 2,000 முகாம்கள் நடத்தப்பட்டன. அதில், அரசின் திட்டங்கள் குறித்தும், அவற்றுக்கான இணையதளங்கள், அவற்றில் எப்படி விண்ணப்பிப்பது என்பது குறித்தும் முகாமில் விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளிடம் பேசிய, மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, ''ஊரக தொழில் முனையங்களை உருவாக்கவும் வேலையில்லாத இளைஞர்களுக்கும், ஆடு, மாடு வளர்க்கும் விவசாயிகளுக்கும் தகுந்த வாய்ப்புகளை வழங்கவும் தற்சார்பு பாரதத்திற்கு வழிவகுக்கும் பணிகளில் தேசிய கால்நடை இயக்கம் செயல்படும்'' என கூறினார். இதில் பேங்கேற்று பேசிய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், ''விடுதலையின் அம்ரித் மகோற்சவம் பாரத மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. தேசிய கோகுல் இயக்கம், விவசாய பொருட்களின் அதிக உற்பத்திக்கு உதவுவதோடு விவசாயிகளின் வருவாயையும் உயர்த்தும்,'' என்றார்.

# கேரளாவில் கோலாகலம்






விஜயபாரதம்

ஆகஸ்ட் 30ம் தேதி ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி கொண்டாடப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி கொண்டாட்டத்தின் தொடக்கமாக, கேரளாவில் 15 லட்சம் வீடுகளில் கிருஷ்ண ஜன்மாஷ்டமி கொடிகள் ஏற்றப்பட்டன. கிருஷ்ணர் கோவில் உள்ளிட்ட பல கோவில்கள், வீடுகள், பொது இடங்களில் கொடிகள் ஏற்றப்பட்டன. கொரோனா பொதுமுடக்கம் இல்லாத காலங்களில் இதனையொட்டி கிருஷ்ண குடாரம், கோபூஜை, விருக்ஷ பூஜை, கோபிகைகளின் நடனம், நதி வழிபாடு, குட்டி கிருஷ்ணர்களுக்கு உணவளித்தல், இசை, நடனம், உறியடி உட்பட பல்வேறு கொண்டாட்டங்கள் நடைபெறும். கேரளாவில் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டத்தை நடத்துவதில் பால கோகுலம் அமைப்புதான் முன்னோடியாக உள்ளது. இம்முறை இவ்விழா கொரோனாவையொட்டி எளிமையாக நடைபெறுகிறது.

# நீரஜ் சோப்ரா ஸ்டேடியம்



விஜயபாரதம்

மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள ராணுவ விளையாட்டு பயிற்சி மையமான ஏ.எஸ்.ஐ, டோக்கியோ ஒலிம்பிக் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவை கௌரவிக்கும் வகையில் தனது விளையாட்டு மைதானத்திற்கு அவரது பெயரை சூட்டியுள்ளது. இந்த அரங்கத்தை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார். இதில் நீரஜ் சோப்ரா, ராணுவ தளபதி எம். எம் நரவானே உல்ளிட்டோர் பங்கேற்றனர். நீரஜ் சோப்ரா ராணுவத்தில் சுபேதாராகப் பணிபுரிகிறார். என்பது குறிப்பிடத்தக்கது.

ஏ.எஸ்.ஐ இதுவரை 34 ஒலிம்பிக் வீரர்கள், 22 காமன்வெல்த் விளையாட்டுப் பதக்கம் வென்றவர்கள், 21 ஆசிய விளையாட்டுப் பதக்கம் ஈட்டியவர்கள், ஆறு இளைஞர் விளையாட்டுப் பதக்கம் வென்றவர்கள், 13 அர்ஜுனா விருது பெற்றவர்களை உருவாக்கியுள்ளது என்ற பெருமை கொண்டது.

இந்நகழ்வில், டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற அனைத்து வீரர்களுக்கும் வாழ்த்து தெரிவித்த அமைச்சர், நவீன அறிவியல் முறையில் திறமையாளர்களை அடையாளம் காண்பது, முறையான உலகத்தரம் வாய்ந்த பயிற்சி, விளையாட்டு அறிவியல் ஆதரவு, சர்வதேச வெளிப்பாடு, ஒருங்கிணைந்த சிறப்பான உட்கட்டமைப்புகளுடன் சர்வதேச போட்டிகளுக்கு விளையாட்டு வீரர்களை தயார்படுத்தும் ஒரு முதன்மை விளையாட்டு பயிற்சி நிறுவனமாக ஏ.எஸ்.ஐ உருவாகியுள்ளதற்கு வாழ்த்து தெரிவித்தார்.




# ரிலையன்ஸ் தடுப்பூசி

விஜயபாரதம்

முகேஷ் அம்பானி தலைமையிலான, 'ரிலையன்ஸ்' நிறுவனத்தின் துணை நிறுவனமான, 'ரிலையன்ஸ் லைப் சயின்சஸ்' இரண்டு 'டோஸ்' செலுத்தும் வகையிலான கொரோனா தடுப்பூசியை தயாரித்துள்ளது. அதன் முதல் கட்ட மருத்துவ பரிசோதனை முயற்சியை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த முதல் கட்ட சோதனை 58 நாட்கள் நடைபெறும். இச்சோதனைகள் வெற்றிகரமாக நிறைவு பெற்ற பின், இரண்டாம், மூன்றாம் கட்ட பரிசோதனைகள் நடைபெறும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும், ரிலையன்ஸ் லைப் சயின்ஸ் நிறுவனம் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் இன்னும் வெளியிடாமல் ரகசியம் காக்கிறது.

# பாடத்திட்டத்தில் பாரதப் பிரிவினை



மக்களவை எம்.பி.யும், பா.ஜ.க மூத்த தலைவருமான ஹர்நாத் சிங் யாதவ், பிரதமர் நரேந்திர மோடிக்கு பாரத பாகிஸ்தான் பிரிவினையை பாடத்திட்டத்தில் சேர்க்க வலியுறுத்தி ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில், 'வரலாற்றை மறப்பது, மறைப்பது நாட்டின் தற்போதைய தலைமுறைக்கு எவ்வகையிலும் மகிழ்ச்சியாக இருக்காது. வரலாற்றில் ஏன் இவ்வளவு பெரிய சோகம் நடந்தது, அதற்கு யார் பொறுப்பு, அப்பிரிவினையால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டது உள்ளிட்ட தகவல்கள் வரலாற்றின் பக்கங்களில் சேர்க்கப்படவேண்டும். வெளிநாட்டு ஊடுருவல்காரர்களால் வரலாற்றில் பாரதப் பெருமையை மறக்கடிக்கும் கல்வி புகுத்தப்பட்டது. ஆனால் உலக வரலாற்றில் 20 லட்சம் மக்கள் கொல்லப்பட்ட, 1 கோடி பேர் இடம் பெயர்ந்த இந்த மோசமான சம்பவம் மறக்கடிக்கப்பட்டது. அதிகாரபூர்வமான இந்த எண்ணிக்கையிவிட உண்மையான எண்ணிக்கை மிக அதிகம்' என தெரிவித்திருந்தார். சுதந்திர தினத்திற்கு ஒரு நாள் முன்னதாக, இரக்கமற்ற வெறுப்பு, வன்முறை காரணமாக தங்கள் உயிரை இழந்தவர்களின் நினைவாக ஆகஸ்ட் 14ம் தேதி பிரிவினை நினைவு நாளாக என்று அனுசரிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயபாரதம்




# பாரதம் தொடர் சாதனை

விஜயபாரதம்

உலகில் பல வல்லரசு நாடுகளே தங்கள் நாட்டு மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் திண்டாடி வருகின்றன. பாரத்த்துடன் ஒப்பிடுகையில் அங்கு மக்கள் தொகையும் மிகக் குறைவுதான். ஆனால், பாரதம் உலகிலேயே மிக அதிகமாக 61 கோடிக்கும் அதிகமானோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தியுள்ளது. அதாவது நமது நாட்டு மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் முதல் டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர். இதைத்தவிர ஐ.நா பாதுகாப்புப் படையினர், அண்டை நாடுகளான நேபாளம், வங்கதேசம், உள்ளிட்ட நாடுகளுக்கும் பாரதம் இலவச தடுப்பூசிகள் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கு, மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கு நிதியுதவி, ஒத்துழைப்பு, சீரிய திட்டமிடல், தெளிவான அணுகுமுறை, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடனான நட்பு என மத்திய அரசு எடுத்த மாபெரும் பல்நோக்கு முயற்சிகள்தான் காரணம் என்றால் அது மிகை அல்ல.

# மஹிந்திராவுடன் கடற்படை ஒப்பந்தம்

இந்திய கடற்படைக்கான நீர்மூழ்கிக் கப்பல், போர் தடுப்பு பாதுகாப்புக் கருவிகள் தயாரிப்புகளுக்காக பாரதத்தை சேர்ந்த மஹிந்திரா நிறுவனத்துடன் ராணுவ அமைச்சகம் ஒப்பந்தம் கையெழுத்திட்டு உள்ளது. தொகுப்புகளுக்கான மஹிந்திரா பாதுகாப்பு அமைப்புகளுடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது. ரூ 1,349 கோடி மதிப்பிலான இந்த ஒப்பந்தம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட முதல் பெரிய ஒப்பந்தமாகும். இந்த கருவிகள் நீர்மூழ்கிக் கப்பல்கள், டார்பிடோக்களை வெகுதூரத்தில் இருந்தாலும் கண்டுபிடிக்கும் திறன் பெற்றவை. மேலும் கப்பலைத்தாக்க வரும் டார்பிடோக்களை அழிக்க, திசைமாற்ற வல்லவை. மேம்பட்ட சிக்கலான சென்சார்கள் கொண்டு தயாராகும் இக்கருவிகளை சிறிய, நடுத்தர, பெரியது என அனைத்து அளவிலான போர்க்கப்பல்களில் பொருத்தி செயல்படுத்த முடியும்.



விஜயபாரதம்

# பாரத விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

பாரத வானியல் இயற்பிய லாளர்களான ஜோதி யாதவ், மௌசுமி தாஸ், சுதான்ஷு பார்வே ஆகியோர் NGC7733, NGC7734 உள்ளிட்ட கேலக்சிகள் ஒன்றிணைவதை கவனித்தபோது, அதன் மையத்தில் இருந்து ஒரு அசாதாரண உமிழ்வை கண்டறிந்தனர். மூன்று கருந்துளைகள் இந்த விண்மீன் திரம்ளின் மையப்பகுதி உருவாகியதையும் கண்டறிந்தனர். மேலும், NGC7733ஐ விட வேறுபட்ட வேகத்தைக்கொண்ட ஒரு பிரகாசமான இயக்கத்தையும் கண்டறிந்தனர். அதற்கு விஞ்ஞானிகள் NGC7733N என பெயரிட்டுள்ளனர்.



விஜயபாரதம்

# சித்து மிரட்டல்

பஞ்சாபில் நேற்று நடந்த பொதுக் கூட்டத்தில் நவ்ஜோத் சிங், என்னை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என கட்சி தலைமையிடம் தெரிவித்து உள்ளேன். அப்படி செய்தால் அடுத்த 20 ஆண்டுகள் பஞ்சாபில் காங்கிரஸ் செழித்து வளரும். முடிவெடுக்கும் சுதந்திரம் எனக்கு வழங்கப்படாவிட்டால் நடப்பதே வேறு. ஒருவரையும் சும்மா விடமாட்டேன்' என்று பேசினார். இது காங்கிரஸ் கட்சியினரிடமும் பஞ்சாப் மக்களிடமும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



விஜயபாரதம்

# விவசாய தலைவரின் உண்மை முகம்



விஜயபாரதம்

மத்திய அரசின் புதிய விவசாய சட்டங்களுக்கு எதிரக போராடி வரும் விவசாய சங்கத்தலைவர் ராகேஷ் திகாயத்தை ஏ.பி.பி செய்தி சேனலுக்காக ரூபிகா லியாகத் நேர்கானல் நடத்தினார். அதில் ரூபிகா கேட்ட நிரூபணங்களுடன் கூடிய ஆணித்தரமான கேள்விகள் எதற்கும் ராகேஷ் திகாயத்தால் பதில் அளிக்க முடியவில்லை.

விவசாய சட்டங்களில் எந்த பிரிவு உங்களுக்கு பிரச்சனை என்கிறீர்கள் என்ற கேள்வியால் ராகேஷுக்கு விவசாய சட்டத்தை குறித்த அடிப்படை அறிவே இல்லை என்பது நிரூபணமானது. விவசாய சட்டங்களால் எத்தனை மண்டிகள் மூடப்பட்டன, விவசாயி நிலங்களை கார்பரேட் நிறுவனங்கள் ஆக்கிரமிக்கப் போகிறது என்ற உங்கள் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் என்ன என்பது உள்ளிட்ட எந்த கேள்விக்கும் பதில் அளிக்க முடியாமல் திண்டாடினார் திகாயத். பின்னர், நீங்கள் அரசுக்கு ஆதரவாக பேசுகிறீர்கள் என பத்திரிகையாளர் மீது பழிசுமத்தி தப்பிக்க பார்த்தார்.

இந்த நேர்காணலில், ராகேஷ் திகாயத் பின்னணியில் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள், காலிஸ்தான் அமைப்பின் ஆதரவு உள்ளது, அவர்கூவிவசாய சட்டங்கள் குறித்து ஒன்றுமே தெரியவில்லை, அவர் விவசாயி அல்ல விவசாயி என்ற பெயரில் இருக்கும் வியாபாரி, போராட்டங்களின் பின்னணியில் வேறு பல நோக்கங்கள் உள்ளன என்பதும் தோலுரித்துக் காட்டப்பட்டது. முன்னதாக, நடிகை ஸ்வரா பாஸ்கரின் சி.ஏ.ஏ பொய் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தியவர் பத்திரிகையாளர் ரூபிகா லியாகத் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதிகளுக்கு பதிலடி




விஜயபாரதம்

இரு தினங்களுக்கு முன், காபூல் விமான நிலையத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதலில் 14 அமெரிக்க ராணுவத்தினர் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். அமெரிக்க அதிபர் ஆற்றிய உரையில் பயங்கரவாதிகளுக்கு அமெரிக்க ராணுவம் தக்க பதிலடி கொடுக்கும் என தெரிவித்தார். அதற்கேற்ப, கிழக்கு ஆப்கன் பகுதியில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத முகாம்களை குறி வைத்து அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. பயங்கரவாத தளபதி ஒருவர் உட்பட பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. காபூல் விமான நிலையம் அருகே யாரும் வர வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பிரேசில் அதிபரின் சர்ச்சை பேச்சு

பிரேசிலின் அதிபராக உள்ள ஜெய்ர் போல்சனாரோ, அதிபர் மாளிகையின் முன்பு திரண்டிருந்த தனது ஆதரவாளர்களுடன் கலந்துரையாடினார். அப்போது அவர், 'விவசாயியாக இருந்தாலும் சரி, விஞ்ஞானியாக இருந்தாலும் சரி, துப்பாக்கி வைத்து இருப்பவர்களை யாராலும் அடிமைப்படுத்த முடியாது. பீன்ஸ் வாங்குபவர்கள் துப்பாக்கி வாங்க நினைப்பவர்களை சீண்ட வேண்டாம்' எனக் கூறியுள்ளார். ஏற்கனவே உலக நாடுகளிடையே துப்பாக்கி கலாச்சாரம் பெருகிவரும் நிலையில், பிரேசில் அதிபரின் இந்தப் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.





# ஹாக்கி மந்திரவாதி தியான் சந்த்



விஜயபாரதம்

உத்தரபிரதேச மாநிலம் அலகாபாத்தில் ஆகஸ்ட்டு 29ல் பிறந்த தியான் சந்த் பாரத ஹாக்கி விளையாட்டின் இணையற்ற வீரர். அவரின் அபாரமான ஆட்டத்தினால் உலக தலைவர்களையே வியக்க வைத்தார். பாரதம் மற்றும் உலக ஹாக்கி வரலாற்றில் இன்றும் மிகச் சிறந்த விளையாட்டு வீரராகக் கருதப்படுகிறார் தியான் சந்த்.

இவரின் தந்தை பிரிட்டிஷ் ராணுவத்தில் பணிபுரிந்தபோது ராணுவ ஹாக்கி அணியில் விளையாடினார். இவர் தந்தையின் பணிமாறுதல் காரணமாக இவரின் குடும்பம் பல நகரங்களில் குடிபெயர வேண்டியிருந்தது. இதனால் தியான் சந்த் ஆறு வருடப் பள்ளிப் படிப்போடு நிறுத்திக் கொண்டார். இவர்களின் குடும்பம் இறுதியாகஉத்தரபிரதேச மாநிலம் ஜான்சியில் தங்கியது.

1928ல் ஆம்ஸ்டர்டாம், 1932ல் லாஸ் ஏஞ்ஜல்ஸ், 1936ல் பெர்லின் என மூன்று ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பாரத ஹாக்கி அணிக்கு தங்கப்பதக்கம் பெற்றுத் தந்தார். 1928 முதல் 1964 வரையிலான காலங்களில் நடந்த எட்டு ஒலிம்பிக் விளையாட்டுக்களில் இவர் இடம்பெற்றிருந்த பாரத ஆடவர் ஹாக்கி அணி தொடர்ந்து ஏழு போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்று சாதனை புரிந்தது.

ஹாக்கி விளையாட்டில் எதிரணி வீரர்களை ஏமாற்றி பந்துகளை சிறப்பாக கையாள்வதில் மேதை எனப் புகழப்பட்டார். இவர் மொத்தம் 400 கோல்கள் அடித்துள்ளார். ஹாக்கி வரலாற்றில் ஒரு வீரர் அடித்த அதிகபட்ச கோல்கள் இது. 'அவர் ரன் எடுப்பது போல கோல் அடிக்கிறார்' என கிரிக்கெட் பிதாமகன் டான் பிராட்மேன் புகழ்ந்தார். 'ஹாக்கி மந்திரவாதி' என உலகமே புகழ்ந்தது. தியான் சந்தின் ஆட்டத்தால் ஈர்க்கப்பட்ட ஹிட்லர், அவருக்கு ஜெர்மன் ராணுவத்தில் உயர் பதவி, வாகனம், வீடு தருவதாகக் கூறினார். அப்போது பாரத ராணுவத்தில் லான்ஸ் நாயக் என்கிற அதிகாரியல்லாத பதவியில் இருந்த தயான் சந்த் அதை மறுத்தார்.

1956ல் பத்ம பூஷண் விருதினைப் பெற்றார். சமீபத்தில் மத்திய அரசு விளையாட்டு வீர்களுக்கு வழங்கப்படுகின்ற மிக உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதின் பெயரை மாற்றி தியான்சந்த் கேல்ரத்னா விருது என்ற பெயரில் இனி வழங்கப்படும் என்று அறிவித்தது. இவரின் பிறந்த நாளான ஆகஸ்டு 29 தேசிய விளையாட்டு நாளாக பாரதத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.